# சிரித்திரன்

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.



ஆசிரியர்:
ஒரு மாட்டுக்கு நாலுகால்: ஐந்து மாட்டுக்கு எத்தனை கால்?


மாணவன்:
மாட்டுக் காலை விட்டுட்டு கவசவாகனத்துக்கு எத்தனை சில்லு எண்டு கேளுங்கோ.

ஆடி - ஆவணி - புரட்டாதி 1994

விலை ரூபா 15/-

தேவரீர்! தேர்தலைப்பற்றி உங்கள் கருத்து யாதோ?

தோற்றவன் பேய்- வென்றவன் பிசாசாக இருக்கலாம்; நீ உறுதியாக இரு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம் சிரிப்பே சீவியம்

நகை: 33 ஆடி - ஆவணி 1994 சுவை: 04


## அதிமதுரம்

**ஒருவர்:-** மதத்தை சேறாக்காதையுங்க.

**மற்றவர்:-** ! ! !

**ஒருவர்:-** தீர்த்தத்தின்போது பெண்களின் மேல் சேறு வீசுகினமே!

**பிச்சைக்காரன்:-** ஐயா நீங்களும் எங்கள் சகோதரம்தான்.

**உத்தியோகத்தன்:-** ! ! !

**பிச்சைக்காரன்:-** எங்கள் ஊனப் பிறப்பை வைத்து பிச்சை எடுக்கிறம் நாங்கள். நீங்கள் உத்தியோகத்தை வைத்து சீதனப் பிச்சை எடுக்கிறியள்.

**சிறந்த மாணவன்:-** சேர்... உவன் எனக்கு அடித்துப் போட்டான்.

**மக்கு மாணவன்:-** உவன் உங்களை எழுப்பப் பார்த்தான்; எழுப்பாதை என்று அடித்தேன்.

**ஆயுள்கைதி:-** சர்வகலாசாலையில் இனி மேல் றாக்கிங் இருக்காது.

**மற்ற ஆயுள்கைதி:-** எங்களிலும் உவை மிருகத்தனமாக நடந்திருக்கினம்.

**அபேட்சகர்:-** உங்கள் வாக்குச் சீட்டை எனக்குப் போடுங்க.

**பைத்தியக்காரன்:-** நான் தேர்தலில் போட்டியிடுகிறன் எண்டு உனக்குத் தெரியாதா?

**ஒருவர்:-** இப்ப பாம்படிக்க ஆம்பிளையளில்லை. எல்லாம் அந்நியநாடு போட்டினம்.

**மற்றவர்:-** கவலைப்படாதை... பெம்பிளையள் பாம்பை வாலிலை பிடித்து அடிக்குங்கள்.

**முதல் திருடன்:-** என்னிடம் வாங்கிய பணம் எங்கே?

**இரண்டாம் திருடன்:-** கோயில் திருவிழா வருகுது -- சங்கிலி திருடி விதத்திட்டுத் தாறன்.


சுண்டிக்குளி
27-9-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயம் நயந்தவை

முரளி நவிண்டில்

பேனாமிர்தம் வெகுஜோர். கபிலர் ரசனையாக எழுதியுள்ளார். அவர் எழுத்தில் மங்கல இசை அமுதம் தொனித்தது.

தாசன்குணா ஸ்ரீரங்கம், அல்வாய்.

கனம் சிரித்திரன் ஆசிரியர்

ஐயா,

மாதம் வெளிவருகின்ற சிரித்திரன் சஞ்சிகையில் நேயம் நயந்தவைப் பகுதியில் சில வார்த்தைகளைப் பிரசுரிக்குமாறு பணிவாக வேண்டிக் கொள்கின்றேன். நன்றி.

தங்களின் இதழான சிரித்திரனில் முக்கிய அம்சமான செய்தி சொன்னதும், பல்லி சொன்னதும், மகுடி கேள்வி பதில் பகுதியும் மிகவும் நன்றாகவும் சுவார்ஸயமாகவும் இருக்கின்றது. இன்னும் கூடுதலான கதை அம்சங்களை இச் சஞ்சிகையில் பிரசுரித்தால் மிகவும் சுவார்ஸயமாக இருக்கும் என நான் கருதுகிறேன். சிரித்திரன் சஞ்சிகை மாதந்தோறும் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். நன்றி.

மு.எழில் பருத்தித்துறை

ஆசிரியருக்கு,

முடிசாய்ந்த மன்னனும் "இது சோளச்சுவை யல்ல சோளகச் சுவை" எனக்கு நன்றாய் பிடித்தது. வீட்டில் நாம் எல்லோரும் சிரித்திரனை நன்கு ரசித்தோம்.

லோ. சிறீதரன் திருநெல்வேலி

தங்கள் சிரித்திரன் சஞ்சிகையின் சித்திரை ஆனி இதழ் படித்தேன். அட்டைப்படம் நன்றாக இருந்தது. ''மனிதம்'' சிறுகதைக்கு எனது பாராட்டுகள். சிறுகதைகளைப்போல் கவிதையில்லாததுதான் குறை.

ப. தவநேசன் மந்துவில், கொடிகாமம்.

அன்புள்ள ஆசிரியரே,

உங்களுக்கு என் நன்றிகள். வாழ்க்கையில் சோதனைகள், வேதனைகள் நிறைந்து சிரிக்க முடியாத இவ்வேளையிலும் எம்மை சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்ட வைக்கும் சிரித்திரனே! உன் சேவை தொடரட்டும். என்றுமே மகுடியார் கேள்வி - பதில் பிரமாதமாகவும் சமுதாயச் சீர் கேட்டைப் படம் பிடித்துக் காட்டுவதாயும் அமைகின்றது. பிரச்சினை, அர்ச்சனை என்கின்ற பகுதியைக் காணவில்லையே? ஏன் நிறுத்தி விட்டீர்களா? நிலைக்கண்ணாடியின் அங்கத ஆசான் கவலை தீர்க்கும் மருந்தாவார் (டிங்கிரி) தொடங்கியிருக்கும் பேனா நண்பர் பகுதி சிறப்பாக அமையும் என எதிர்பார்க்கிறேன். அகராதி பகுதி சிரிப்பும் சிந்தனையும் நிறைந்து காணப்படுகிறது. ''மெயில்வாகனத்தாரின் மனோரதம்'' என்ற பகுதியில் பேராசிரியர், ஒரு நுளம்பு குழப்பியதால் எழுத முடியவில்லை என்றார். எங்கள் எழுத்தாளர்களிடம் இருந்து எழுதுகோல் பறிக்கப்பட்டாலும் குருதியால் எழுதுவார்கள் - கண்ணீரால் கவிதை விதைப்பார்கள் - நாளைய விடிவுக்காக, என்ற வரிகள் எனக்குப் பெருமை தந்தது. சிரித்திரா நீ பல்லாண்டு காலம் வாழ்க; உன் சேவைகள் தொடரட்டும்.



பெண்:- என்ன சோதிடர்...... சோர்ந்து வாறியள்

சோதிடர்:- இப்ப கொம்பியூட்டர் குறிப்பு பொருத்தம் பாக்குதாம். நாங்கள் வனவாசம் போக வேண்டியதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி அழைத்த வேந்தன்.

நிலைக்கண்ணாடி

சோகத்தின் சாமம் நீண்டு கொண்டு போகின்றது. கண்ணீர் ஆறு பெருகிக் கொண்டு போகிறது. நாட்கள் நகர நேய நினைவுகள் விஸ்வ ரூபம் எடுக்கின்றன. பெருகும் துயராற்றுக்கு அஞ்சலி ஒரு அணைகட்டு அல்ல.

துரைராசா துயர்துடைக்க வந்த தேவன், தமிழ்மக்களுக்காக சிலுவை சுமக்க வந்த இரட்சகர், கிளாலிப் பாதை யாலும் போய் வந்து கடமை செய்த கர்மவீரர். மக்களோடு மக்களாக நின்று உரிமைப் போருக்கு உரம் கொடுத்த உறுதி நெஞ்சன்.

தரப்படுத்தல் தாளிட்டு தமிழ் மாணவரை சர்வகலா சாலை புகாது செய்தும், குண்டுகள் போட்டு பாட சாலைகளைத் தரைப்படுத்தல் செய்த போதும் தளராது நின்று கல்வித் தரத்தை உயர்த்த உழைத்த கல்விமான். புதியகல்வித் திட்டங்களால், புதிய துறைகளால் சர்வகலாசாலையை தரத்தால் உயர்த்த, ஓயாது தன்னை உருக்கிய உபவேந்தர்.

தர்மதீவு அரசாங்கம் தார்மீக உணர்வை மதித்து மருத்துவத்தடை கொண்டுவந்தது. நோயாளிகள் துடித்தார்கள், உளம் நெகிழ்ந்த பேராசிரியர் மருத்துவ மாணவர்களை தேச சேவைக்கு அழைத்தார்.

ஆண்டான் அடிமை வாழ்வால் நாடு மண்டிக் கிடந்தது. நாங்கள் சுரண்டும் கணக்கெழுதும் பேனா ஓட்டிகளானோம். விழிப்புணர்ச்சி தோன்றியது. தோன்றினர் துரைராசா போன்ற மகா மனிதர்கள். விதி துரைராசா அவர்களை எம்மத்தியில் நீண்ட காலம் வாழ விடவில்லை. அவர் என்றும் எமது நினைவில் நின்று வழிகாட்டுவார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.
சுண்டிக்குளி கிளை நூலகம்

**வயது சாதனை செய்வதற்கு தடையாய் இருக்கவில்லை.**

- *85 வயதான பிறகும் டாஸ்கானிஸ் மேடையேறிப் பாடல் நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டினார்.*
- *84 வயதான பிறகும் எடிசன் புதிதாக ஏதாவது ஒன்றைக் கண்டுபிடித்தார்.*
- *அமெரிக்க சுப்பிரீயம் கோர்ட் தீர்ப்புகளை எழுதும்போது நீதிபதி ஹோம்சுக்கு வயது 90.*
- *தததுவப் புத்தகங்களை எழுதும்போது கான்ட் என்பவருக்கு வயது 70.*
- *86 வயதானபோதும் மகத்தான ஓவியங்களை வரைந்துகொண்டிருந்தார் மான்ட்.*

**மக்களில் அறிவு மிகுந்தவர் சாலமன். அவரின் அறிவுரைகள்.**

- *எப்போதும் இனிமையாகப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள்.*
- *கடுமையான சொற்களை உபயோகியாதீர்கள்.*
- *கோபத்திற்கு அடிமையாகி பதில் கூறாதீர்கள்.*
- *வேகமாக முடிவெடுத்துச் செயற்படாதீர்கள். இது உங்கள் வாழ்க்கையை மாற்றிக் காட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததானம் அவசியம்

இன்று எல்லாவற்றிலும் ஒரு வேகம்; எம் மண்ணில் எங்கும் அபாயம்.

எவருக்கு...... எங்கு... எந்நேரத்தில்...... என்ன நடக்கும் என்பதனை நிச்சயிக்க முடியாத ஒரு அவல வாழ்வு.

எவ்வித வேறுபாடுமின்றி எம் அனைவரையுமே ஆபத்து சூழ்ந்துள்ளது.

எதிரியின் தாக்குதல்களால் சொல்லொணாத் துயரத்திற்குட்பட்டுள்ள எம் மக்களை நோய்களின் தாக்கமும் சேர்ந்து மேலும் துன்பத்துக்குள்ளாக்குகின்றன.

இந்நிலையில், இயற்கையாகவோ அன்றி செயற்கையாகவோ ஆபத்துக்குள்ளாகும் எம்மவருக்கு உடனடியாக உதவியளிக்க வேண்டியது தமிழீழ தேசத்தவரான எம் அனைவருக்குமேயுரிய கடமையாகும்.

காலதாமதம் ஒருவரது உடல் நலத்தைக் குலைத்து,உயிருக்கே உலைவைத்திடக் காரணமாகிடலாம்.

ஆனாலும், இதனையுணர்ந்து நாம் பொறுப்புடன் செயற்படின் மரணத்தின் விளிம்பிற்குச் சென்றோரைக்கூட இறப்பிலிருந்து மீட்கலாம்.

ஆம்! இத்தகைய உயிர்காக்கும் இரகசியம் வேறேதுமல்ல - அது, இரத்த தானம் தான்!

பல்லாயிரக்கணக்கானோர் தம் உயிரீந்து உதிரம் சிந்தி நம் தேசத்தை மீட்கப் போராடுகின்ற இவ்வேளையில், ஆகக் குறைந்தது குருதித் தானம் அளித்தாயினும் அவ்வரிய உயிர்களைக் காக்க நாம் முன்வர வேண்டாமா......?

விதவிதமான நோய்களுக்குட்பட்டும் வேறு பல வகைகளிலும் பாலகப் பருவத்திலேயே அநியாயமாக உயிரிழக்கின்ற எம் தேசத்தின் சொத்துக்களான இளம் சிறாரை மரணத்தின் பிடியினின்றும் மீட்காது நாம் வாளாதிருக்கலாமா......?

ஆங்காங்கே இடம்பெறுகின்ற எதிரியின் தாக்குதல்களிலும் வேறு பல விபத்துகளிலும் கடுங்காயமுற்றும், அங்கங்களை இழந்தும் பெருமளவு குருதி வெளியேறிய நிலையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருப்பவரைக் காக்க முன்வராது - மனிதமே இல்லாது நாம் வாழலாமா......?


மனமிருந்தும் இரத்த தானம் அளிப்பதற்குரிய மருத்துவ ரீதியான தகைமையற்றுப் பலர் வருந்துகையில், அத்தகுதியும் வளமும் உள்ளவர்கள் எதிர்காலத்திலாயினும் தப்பபிப்பிராயங்கள் நீங்கித் தெளிவு பெற்று ஆவலுடன் காலத்தின் வேண்டுகோளை ஏற்று, உரிய முறையில் உணர்வுடன் செயற்பட்டு இரத்த தானம் செய்வோமாக......!

ந.தேவிகா



**அதிபர்:-** நீ என் அந்நிய நாடு போக விரும்பவில்லை.

**கிளாக்:-** ஏன் சேர்...... அங்க மரணம் இல்லையா?



# மகுடி

மு. குமார் — கரவெட்டி

❋ *சீதனவழக்கம் நம்ம மண்ணை வாழ வைத்ததா?*

☼ சீதன சுரம் சிரம் ஏறி சீர்குலைந்தவர்களுமுண்டு.

ரேவதி

❋ *கலையால் கலைஞன் வளமாய் வாழமுடியுமா?*

☼ கலை காசோலையில்லா வெறுமையான மரம். வீடு வேய முடியாது.

ம. சராரங்கா

❋ *தேர்தலால் தமிழன் தேரில் ஏறிவிட்டானா?*

☼ தேர்ச்சில்லில் நசிந்ததுண்டு.

த. கேசவண்ணன் — நீர்வேலி

❋ *பசி பற்றி கூறும் மகுடியாரே?*

☼ 'Poverty is Sixth Sense' என பிரெஞ்சுப் பழமொழி கூறுகிறதே.

க. பரம் — நல்லூர்

❋ *கடவுள் எங்கே இருக்கிறார் எனக் கூறமுடியுமா?*

☼ கடவுள் எங்கே இருக்கிறார் என்று ஆராயாதே. இறைவன் படைத்த பொருட்கள் எங்கேயென்று ஆராயுங்கள்.

முரளி — மானிப்பாய்

❋ *மேல் நாட்டவர் மேலே வளரவும் கீழ் நாட்டவர் கீழே கீழே போகவும் காரணம் என்ன?*

☼ மேல் நாட்டவர் நேரத்தை முதல் என மதிக்கிறார்கள்
கீழ் நாட்டவர் நேரம் முதலாளியினது என மதிக்கிறார்கள்.

யோ. சிறீதரன் — திருநெல்வேலி

❋ *இன்றைய கல்விநிலைபற்றி?*

☼ விஞ்ஞானம் ஒரு துருவம்... கலை ஒரு துருவம்... இடைவெளியால் இடர்தான் ஏற்பட்டது கல்வி இருதுருவங்களையும் இணைக்கும் காந்த சக்தியாயிருக்கவேண்டும்.

தேவநாயகி — வட்டுக்கோட்டை

❋ *மூன்றாம்பிறை பார்த்து நாம் கண்டது என்ன?*

☼ மூன்றாம் நாடாய் இருக்கின்றோம்.

க. மோகன் — கோப்பாய்

❋ *தார்மீகத் தாத்தாவின் ஆட்சியில் தார்மீகம் கண்டோமா?*

☼ அவரின் நிழலில்த்தான் சிறைச்சாலை செந்நீரில் மிதந்தது.

மு. வேதவனம் — உடுப்பிட்டி

❋ *உலகில் மூண்டாம் யுத்தம் மூண்டால்?*

☼ அணுக்குண்டுகள் சங்கார நடனம் புரியும். ஆலை. சாலை, சோலையெல்லாம் நீறு பூத்திருக்கும்.

க. சங்கீதா — மானிப்பாய்

❋ *வீட்டில் புரட்சிப்புயல் கிளப்பிய கணவன்மார் எல்லோரும் பூனையாப் பதுங்குகிறார்களே?*

☼ தலகணி மந்திரத்தில் கட்டுண்ட கணவன்மார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. சிறீதரன்** — நல்லூர்

❋ மென்மையான இனமென்று ஆங்கிலேயன் பெண்களுக்கு முதலிடம் கொடுக்கிறானே. தமிழன்?

☼ பெண் கடகச்சுமையுடன் கணவனுக்குப் பின் காததூரம் வரக் காணவில்லையா!

**அ. யசோதரன்** — புத்தூர்

❋ ஆலயத்திற்குப் பொழுது போக்காகப் போகும் யுவன் யுவதிபற்றி உமது கருத்து?

☼ ஆலயம் கல்யாணப் பதிவு அலுவலகம் என நினைக்கிறார்கள் போலும்.

**க. சங்கர்** — சுதுமலை

❋ தமிழ்ஈழம் உமக்கு இனிக்கிறதா?

☼ யாழ்ப்பாண மாம்பழம், தண்ணீர் ஊற்று பலாப் பழம், வவுனியாத் தோடம்பழம் எல்லாம் சுவை சிந்தும் கனிகளல்லவா.

**ஹேமச்சந்திரா** — அல்வாய்

❋ அந்நியநாடு சென்று வரும் எம்மவர் தம்முடன் எதனைக் கொண்டு வருகிறார்கள்?

☼ மனச்சாட்சியில்லாத மனதை.

**சி. இளங்கோ** — கோப்பாய்

❋ இன்று தமிழ்ஈழமென்பது ஒரு மாயக்கனவுதான் என்று நினைப்பவன்பற்றி?

☼ அது தோல்விமனப்பான்மையின் தரிசனம்.

**த. பாலன்** — யாழ்ப்பாணம்

❋ நம்மவர் ரோட்டில் கத்திக்கொண்டு போவதேன்?

☼ வழியில் நந்திகள் வழிமறிக்கும் மென்றுதான்.

**க. முகுந்தன்** — கோண்டாவில்

❋ காலம் காலமாக உபதேசம் செய்தும் உலகம் திருந்தாதது ஏன்?

☼ சோகை பிடித்த சமுதாயத்தை சோக்கிரட்டீஸ் திருத்த முயன்றும் சோகமுடிவை தழுவினார்.

**க. நேசன்** — உடுப்பிட்டி

❋ அன்றைய நாடகங்கள் தொடராமல் போனது ஏன்?

☼ விரசவாந்தி எடுத்தார்கள், பெண்கள் முகம் கொடுக்கவில்லை.

**யசோதன்** — புத்தூர்

❋ தற்போதைய எழுத்தாளர்கள் அநேகர் இலக்கியத் துறையிலிருந்து விலகிவிட்டார்கள். காரணம் என்ன?

☼ எரியும் வீட்டை பேனாமையால் அணைக்க முடியாது என நினைக்கிறார்கள்.

**ம. முத்துரங்கன்** — சித்தன்கேணி

❋ இலங்கை, உல்லாசப்பிரயாணிகளின் மோட்சமா?

☼ ஓம். ஆனால் உள்ளூர் வாசிகளின் பாதாள உலகம்.

**சந்திரராஜன்** — அல்வாய்

❋ ஒரு மனிதனை நெறிப்படுத்துவது தேவாலயமா? அறிவாலயமா?

☼ எம்மை நெறிப்படுத்தும் அங்குசம் அறிவாலயத் திலல்லவா பெறுகின்றோம்.

**த. ஜனகன்** — கரவெட்டி

❋ கட்டிய மனைவியையும் பிள்ளைகளையும் நட்டாற்றில் விட்டு வேறுதிருமணம் செய்பவன் பற்றி?

☼ இனப்பெருக்கம் விரும்பும் இனத்துரோகி.

**அரவிந்தன்** — சாவகச்சேரி

❋ குழந்தை வளர்ந்து விட்டால்?

☼ குழந்தையாய் இருக்கும்போது நித்திரையிலும் சிரிப்பு. வளர்ந்து விட்டால் சிரிப்பு விடைபெற்று விடும்.

**ம.மனோகர்** — கொக்குவில்

❋ ஜெயவர்த்தனா, யு. என். பி தோற்றால் இனவாதம் வெடிக்குமென்கிறாரே!

☼ முனிவர் இனவாதஹோமம் வளர்க்கப்போகிறார் போல,

**வ.பரணீதரன்** — நல்லூர்

❋ ஆமிக்காரனில் மிருக உணர்வு இருந்தால்?

☼ கைநாட்டுக்குறி குருதிகொண்டு வைப்பான்.

**சி.பேரின்பம்** — யாழ்ப்பணாம்

❋ தென் இந்திய திரைப்படங்களுக்கு தடைபோடுவது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

☼ இலங்கைக்கு நோய் புகாவண்ணம் தடைசெய்ய மண்டபம் 'கேம்'ப் பிருக்கிறது; அதுபோல் சமூக விரோதப் படங்களை தடைசெய்ய 'கேம்'ப் அமைதல் வேண்டும்,

**செ,பிரபா** — யாழ்ப்பாணம்

❋ பொடி போட்டு யோசிப்பவருக்கும் புகைவிட்டு சிந்திப்பவருக்கும் வித்தியாசம் என்ன?

☼ இரண்டிற்கும் போதை தேவையில்லை. இருவரும் பேதைகள்.

**ப.தேவநேசன்** — கொடிகாமம்

❋ பிறரைத் தூற்றுவோர் பற்றி?

நல்ல சமூக விவசாயிகள். பதர் பொறுக்கிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெயில் வாகனத்தாரின் மனோரதம்.

சால்வை என்னும் அங்க வஸ்திரம் அணியும் நாகரீகம் எம்மை விட்டு அகன்று விட்டது. பஞ்சாபி உடை அணியும் பெண்களில் சால்வை மங்கள தோரணமாகத் தொங்குகிறது. துர்க்கை அம்மன் 'தேவஸ்தான கல்யாண மண்டபத்திற்கு திருமண வைபவம் ஒன்றிற்குப் போயிருந்தேன். எல்லோரும் அறுகரிசிபோட்டு வாழ்த்தும் நேரம் வந்தது. என்னையும் ஆசீர்வதிக்கும்படி வேண்டினார்கள். என்னிடம் சால்வை இருக்கவில்லை. தலைப்பாகை கட்டாது அறுகரிசி போடுவது சமயமரபு இல்லை. திரு திரு என விழித்தேன். என் கண்கள் பஞ்சாபி உடை அணிந்த பெண் ஒன்றில் பட்டது. பெண்ணும் சால்வை உவந்து தந்து என்னை ஆசீர்வதிக்க உதவினாள்.

அப்பொழுது யாழ்தேவி யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையில் 'வார்' ஓடிய காலம்' அப்பொழுது துட்ட



சாலச் சிறந்த சால்வை

கைமுனு வழிவந்த துஷ்டன் ஒருவன் ஒரு கல்லை ஓடும் யாழ்தேவிக்கு இலக்கு வைத்தான். கல்லு யன்னலூடாக வந்து ஒரு பெண்மணியின் தலையைப் பிழந்தது. குருதி கொட்டியது. சூளிசான் அணிந்த உத்தியோகத்தர் தமது கைக்குட்டையால் கங்கையெனக் கொட்டிய குருதியை தடைசெய்யப் பகிரதப் பிரயத்தனம் செய்தனர். ஒரு தமிழ் ஆசிரியர் 'தனது சால்வையைத் தண்ணீரில் தோய்த்து தலையில் கட்டினார். அப்போதுதான் சால்வை முதல் உதவிச் சிகிச்சையில் முதல் ஸ்தானம் வகித்து என்று உணர்ந்தனர்.

சால்வை வெய்யிலில் வேகும் தலைக்கும் கவசமாக உதவுகிறது. என்று சால்வை எமது மத்தியில் இருந்து மறைந்ததோ அன்றே தலைவலி மாத்திரைகள் நாட்டுக்குள் படை எடுக்கத் தொடங்கின. மாத்திரையை கடலைபோல் வாயில் போடுவதைப் பார்க்க அழுவதா சிரிப்பதா எனத் தெரியவில்லை. எல்லாகளிசான் அணிந்தவர்கள் பொக்கட்டிலும் பெண்களின் டம்பப்பையிலும் தலைவலி மாத்திரை துப்பாக்கி ரவைபோல் தலை வலியைத் தாக்க காவல் இருக்கின்றது.



**மீனாச்சி:-** *மோளின்ரை கடிதம் கனடாவாலை வந்த சிலமன்?*

**பொன்னாச்சி:-** *ஓ...... ஊறுகாய் பப்படம் கொண்டு போனது நல்லதாய் போச்சாம். தான் நல்லூர் திருவீழா 25 நாளும் விரதம் பிடிக்கப் போறாளாம்.*

பொது நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலரசம்

யூறேப்பிடிஸ் (Eurepides) ஓர் சிறந்த கிரேக்க நாடக எழுத்தாளன். அவர் இருமனைவியுடனும் இரு மாமியுடனும் வாழ்க்கை நடாத்த நேர்ந்தது. இரு மனைவியும் இரு மாமியும் நடாத்தும் தர்பாருக்கு இயமலோக தர்பாரும் இணையாகாது. ஆனால் அவர் படைத்த கதாநாயகிகளோ உயர்ந்த குணம் படைத்த உத்தமிகள் .யூறேப்பிடிஸ் நண்பன் சோக்கிரட்டீஸ் அவரின் நாடகங்களைப் பார்த்து ரசிக்க தவறவேமாட்டார்.

கர்நாடக இசையுலகிலும் திரைஇசை உலகிலும் யேசுதாசனின் பாடலை தேனாமிர்தமாக மக்கள் ரசிக்கிறார்கள். ஓய்வு நேரங்களில் அவர் திரைக்கு முன்னால் தூரிகையுடன் காட்சி அளிப்பாராம். அவர் அண்மையில் ஓவியக் கண் காட்சி நடாத்துவதற்கு தயார் செய்கிறார்.

பாரதியின் சின்னச் சங்கரனும், புதுமைப் பித்தனின் கந்தசாமிப் பிள்ளையும், கல்கியின் வந்தியத்தேவனும் சிவகாமியும் தமிழ்ப் படைப் புலகில் சிறந்த பாத்திரங்கள் என கண்ணதாசன் எழுதியுள்ளார்.

குழந்தைகள் கூரியநுண்ணுணர்வு உள்ளவர்கள். அவர்களுடைய உணர்வு. மதிக்கப்பட வேண்டும். வளர்க்கப்படவேண்டியது. குழந்தைகளுக்கு படைப்பு விஷயத்தில் இருந்துவரும் ஆவலை அடிப்படையாகக் கொண்டே ஈ சாப் புக்கதைகள் அத்தனையும் உருவாக்கப்பட்டது.

ஹிரோசிமாவில் அணுக்குண்டு விழுந்தது உலகம் அழுதது. அவ்விடம் இடுகாடாக மாறியது. அதைப் பத்திரிகை நிருபர் ஒருத்தர் பார்த்துவிட்டு பின்வருமாறு கூறியிருந்தார். "பத்துமைல் நீளமுள்ள சவப்பெட்டி" என்பதே அது.

ஹொலிவூட் தயாரித்த மிகப் பிரமாண்டமான (Super Colossal) படம் Gone With the Wind ) என்றே கூறலாம். இது படமாளிகையில் 3 மணித்தியாலம் 40 நிமிடங்கள் இரு இடை வேளையுடன் ஒடிய திரைப்படம். இன்று இந்தப் படம் தயாரிக்க மூன்று கோடிக்கு மேல் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

மேல்நாட்டு மறு மலர்ச்சி ஓவிய முறையை முதலில் உண்டாக்கியவர் கியட்டோ (GOTTO) ஆவர். இவரின் ஓவியங்கள் உலகில் மிகச் சிறந்தவையாக கருதப்படுகிறது. இவ் ஓவியங்கள் அனைத்தும் முப்பரிமாண முறையில் வரையப்பட்டது. முப்பரிமாணமுறை ஓவியத்தை கியட்டோ அவர்களே முதலில் தொடங்கி வைத்தார்.

கல்லில் தத்துவம் கண்டவன் தமிழன். கல்லில் வடித்த நடராஜர் சிலை ஓர்தத்துவ தரிசனம். நடராஜ சிலைகளுள் மிகச்சிறந்த வேலைப் பாடுகள் கொண்ட கலை நயமிக்க சிலை தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்திலுள்ளது. இச்சிலை ராஜராஜசோழன் காலத்தில் செதுக்கப்பட்டது.

புதியஉண்மைகளைக் கண்டுபிடித்த ஞானிகளை உலகம் உதறித் தள்ளியது.சோக்கிரட்டீஸ், கலிலியோ, மார்க்கோசி, றயிட்சகோதரர்.கிரஹம் பெல் எல்லோருடைய வாழ்வும் சோகமாகவே முடிவடைந்தது. மெஸ்மர் மனிதனிடமுள்ள காந்த சக்தியைக் கண்டறிந்தவர் வியனாவில் ஒரு டாக்டராக இருந்தார். வியனா மக்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? அவரைஅவர் புதுமுகச் சிகிச்சையோடு அவரை ஊரில் இருந்தே துரத்தி விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கறுப்புச் சூரியன்’

*நெல்சன் மண்டேலா*

நெல்சன் மண்டேலா – அவன் ஒரு சிறைப் பறவை. சிறைக்குள் இருந்து கொண்டே சிறகடிக்கக் கற்றுக் கொண்டவன். நான்கு சுவர்களுக்கு நடுவில் இருந்து கொண்டே நாடு தழுவிய விடுதலைப் போரை முன்னெடுத்துச் சென்றவன்.

பலருக்கு சிறை வாழ்க்கை ஒரு கறையாகத்தான் இருக்கும். ஆனால் இவனுக்கோ அது ஒரு வித்தியாசமான அறையாகத்தான் இருந்தது. அங்குதான் அவன் தன்னை மேலும், மேலும் புடம் போட்டுக் கொண்டான். அள்ள, அள்ளக் குறையாத ஆபிரிக்க தங்கத்தைப் போல அங்குதான் அவன் தன் சுதந்திர உணர்வுச் சுரங்கத்தை மேலும் ஆழமாக்கிக் கொண்டான்.

விலங்குகளைத்தான் மனிதர்கள் பழக்குவது வழக்கம். ஆனால் தென்னாபிரிக்கச் சிறைகளிலோ மனிதர்களை விலங்குகள் பழக்கும் வழக்கமிருந்தது. அங்கு கறுப்பர்கள் என்றாலே காறி உமிழப்பட்டவர்கள் என்றுதான் கருதப்பட்டார்கள். இன்று நேற்றல்ல நானூறு ஆண்டுகளுக்கு மேலாக கறுப்பர்கள் நசுக்கப்பட்டுக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள்.

வஸ்கொடகாமா நன்னம்பிக்கை முனையை கண்டுபிடித்தானோ இல்லையோ அன்று தொட்ட ‘ஏழரைச்சனி’ இன்றுதான் தென்னாபிரிக்காவை விட்டு சற்று விலகியிருக்கிறது. தென் ஆபிரிக்காவின் தெற்கே அமைந்த கேப் முனைதான் அன்று வஸ்கொடகாமாவுக்கு ‘நன்னம்பிக்கை முனை’யாக தென்பட்டது. அவனுக்கு மட்டுமல்ல, ஆசியாவின் வளங்களை சுரண்ட நினைத்த ஐரோப்பிய ஆதிக்கக்காரர்கள் எல்லோருக்குமே அதுதான் ‘நன்னம்பிக்கை’ தர முனைந்தது. அன்று அருகே ஐரோப்பியர் தமது கப்பற் போக்குவரத்தின் பாதுகாப்பிற்காக குடியிருப்புக்களை அமைத்துக் கொண்ட போதே அடக்கு முறைக்கான அத்தியாயமும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

மெல்ல மெல்ல பெரிய ஆபிரிக்காவை சிறிய ஐரோப்பா விழுங்கிக் கொண்டது. பெரும்பான்மையினத்தை சிறுபான்மையினம் அடக்கத்தொடங்கியது. ஈட்டிகளை பீரங்கிகள் விழுங்கிக் கொண்டன. சுதேச மக்கள் பழங்குடி மக்கள் ஆக்கப்பட்டார்கள்.

தங்கத்தை சுரண்டிச் செல்ல வந்தவர்கள் தாயகத்தையுமல்லவா சுரண்ட நினைத்தார்கள். தங்கத்தின் பளபளப்பை தேடிவந்தவர்களுக்கு அதைத் தோண்டித் தந்த ‘கறுப்பர்களை’ மட்டும் பிடிக்கவில்லை. “கறுப்பர்கள் மனிதர்களல்ல; அடிமைகள்” என்று அடக்கு முறையாளர்கள் உச்சரிக்கத் தொடங்கிய போதே புரட்சி பூக்கத் தொடங்கிவிட்டது.

தென் ஆபிரிக்காவின் சவன்னாப் பகுதியில்தான் மனித இனம் முதன் முதலாக தோன்றியதாக அறிவியலாளர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். அந்த மனித இனம் இன்று வரை சுயநிர்ணய உரிமையற்ற அடிமைப்பட்ட இனமாக வாழ்ந்து கொண்டிருந்தது என்பது ஆச்சரியம் அல்லவா.

இது – கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றி மூத்தகுடி சொந்த மாயொரு நாடில்லாமல் அலையும் கதை போலல்லவா இருக்கிறது.

ஆனாலும் கறுப்பர்கள் தளரவில்லை. காலங் காலமாகப் போராடினார்கள். வெள்ளையரும் விடவில்லை. காலங்காலமாக ஒடுக்கினார்கள்.

தென்னாபிரிக்காவில் விருந்தாளியாக தங்கியிருந்த காந்தியை, ‘கறுப்பன்’ என்ற காரணத்திற்காக வெள்ளையர் புகைவண்டியிலிருந்து தூக்கியெறிந்த போதுதான் மண்டேலா போன்ற இளைய சூரியன்களும் தேசியப் போராட்டத்தில் இணைந்து கொண்டன.

வெள்ளையர்கள் இன்னும், இன்னும் கறுப்பர்களை இருட்டடிப்புச் செய்தார்கள். நிறவேற்றுமைக் கெதிராக கிளர்ந்தெழுந்த ‘கறுப்பர்களை’ கொடூரமாக கொன்று குவித்தார்கள். இந்த நேரத்தில்தான் மண்டேலா தேசத்தின் ஈட்டியாக மாறினான். அகிம்சைக் கொள்கை என்கிற அத்தியாயம் இத்துடன் முடிவுக்கு வருகிறது என்று சொல்லிக் கொண்ட நெல்சன் மண்டேலா ‘தேசத்தின ஈட்டி’ என்கிற இராணுவப் படைப் பிரிவொன்றை ஆரம்பித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையரின் சாயம் வெளுக்கத் தொடங்கியது. கறுப்புச் சூரியன் தங்களையும் கொளுத்தி விடுவானோ என்று வெள்ளையர்கள் பயந்தார்கள்.

விளைவு - மண்டேலா கைது செய்யப்பட்டான். அவனை விழுங்குவதற்கு தென்னாபிரிக்கச் சிறைகள் ஆவென்றபடி காத்துக் கொண்டிருந்தன. மண்டேலாவுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று மக்கள் பயந்தார்கள்.

ஆனால் அப்படியொன்றும் நடக்கவில்லை. தென்னாபிரிக்காச் சிறைகள் 'சிறீலங்காச் சிறைகளை' விட மனிதாபிமானம் மிக்கனவாகவே நடந்துகொண்டன, 'வன்முறைக்கு வழிவகுத்தார்' என்ற காரணத்திற்காக நீதிமன்றின்முன் நிறுத்தப்பட்ட அந்த ஆபிரிக்க குட்டிமணியின் கண்கள் தோண்டப்படவில்லை. அவனது குருதி குடிக்கப்படவில்லை. பரிநிர்வாணமடைந்த புத்தனுக்கு முன்னால் நிர்வாணமாக்கப்பட்டு அவனது ஆணுறுப்பு அறுக்கப்படவில்லை; ஊனுடம்பு சிதைக்கப்படவில்லை.

அந்த அளவிற்கு, அவர்கள் எங்கள் எதிரிகளைப் போல 'நிறை வெறியர்களாக' இருக்கவில்லை. நிற வெறியர்களாக மட்டும் தான் இருந்தார்கள்.

மண்டேலா 'உள்ளே' இருக்க வெளியே அவனது படைத்தளபதி கிறிஸ்காணி ஆயுத எதிர்ப்பை தீவிரமாக்கினான் - மண்டேலா சிறையைக் கண்டு பணிந்து போகவில்லை. துணிந்து போனான்.

சிறை, அது அவன் விரும்பும் அறை மேகத்துக்குள் நீர் சிறையிருப்பதால் தானே மழையாகப் பொழிந்து மண்ணை மகிழ்விக்க முடிகிறது. கூட்டுப்புழுவாக சிறைவைக்கப்பட்டிருப்பதால்தானே வண்ணத்துப்பூச்சி சுதந்திரமாகச் சிறகடிக்க முடிகிறது. அதுபோல் தடுப்புக் காவல்தான் மண்டேலாவுக்கு சுதந்திரச் செட்டைகட்டி அவனை விடுதலை வானின் அதிபதியாக்கியது.

அவனுக்கு ஆயுள் தண்டனை விதித்தவர்களுக்கு 'ஆயுள்' கொஞ்சம் என்பதை அன்று யாரும் அறிந்திருக்கவில்லை. வாலியின் எதிரில் எவன் வந்தாலும் வந்தவனின் பலத்தில் பாதி அவனுக்கு சேர்ந்து விடுகிறதே அதைப் போல - எதிர்க்க எதிர்க்க விடுதலைப் புலிகள் அசாத்திய பலத்துடன் எழுகிறார்களே அதைப்போல - சிறைக்குள் மறைக்க, மறைக்க கறுப்புச் சூரியன் மேலும், மேலும் பிரகாசமாகியது.

தென்னாபிரிக்காவின் முன்னாள் வெள்ளையின ஜனாதிபதி டீ. கிளார்க் இதை உணர்ந்து கொண்டார். எங்கள் 'டிங்கிரி பண்டாக்களால்' தான் உணர்ந்துகொள்ள முடியாது போய்விட்டது. அது வேறு கதை.

*27* வருட சிறை வாழ்க்கைக்குப் பின் *1990* களில் 'கறுப்புச் சூரியன்' விடுவிக்கப்பட்டது. அதற்குப் பின்னரும் சோதனைகள் - வேதனைகள்.

மண்டேலாவின் விடுதலைக்குப் பின்னரும் *15,000* இற்கு மேற்பட்ட அப்பாவிக் கறுப்பினத்தவர் கொல்லப்பட்டனர். மண்டேலாவினதும் மக்களினதும் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி 'கிறிஸ்காணி' இரகசியமாகப் படுகொலை செய்யப்பட்டான்.

'தேசத்தின் ஈட்டியின்' முனையாகச் செயற்பட்ட இந்த 'ஆபிரிக்க கிட்டுவின்' இழப்பால் மண்டேலா தளர்ந்து போனான். ஆனாலும் அந்தக் 'கறுப்புச் சூரியனின்' வெம்மை குறைந்து விடவில்லை. மாறாக அது மேலும் உக்கிரமானது.

டீ. கிளார்க் வேறுவழியின்றி மண்டேலாவோடு சமரசம் செய்து கொண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசையும் அவருடன் பகிர்ந்து கொண்டார். கறுப்புத் தோல்களுக்குள் இருந்த வெள்ளை உள்ளங்களை 'நிறப்பிரிக்கை' செய்து பார்த்தார்களே தென்னாபிரிக்க நிறவெறியர்கள் -அவர்களுக்கு முன்னேதான் இந்த அதிசயம் நிகழ்ந்தது.

*1994* மே *25*. பௌர்ணமி நாள். நள்ளிரவு நேரம். வெள்ளையர்களின் கொடி இறக்கப்பட்டு கறுப்பர்களின் சுதந்திரக் கொடி ஏற்றப்பட்டது. வெண்நிலவு வெள்ளையருக்கு மௌனமாக இறுதியஞ்சலி செலுத்த, இரவு நாளை உதிக்கப் போகும் 'கறுப்புச் சூரியனுக்கு' கட்டியம் கூறிக் கொண்டிருந்தது.

கறுப்பர்கள் ஆவலோடு எதிர்பார்த்த அந்தக் 'கறுப்பு விடியலும்' வந்து சேர்ந்தது. கடந்த மே 9 ஆம் திகதி கேப்டவுனிலே புதிய தென்னாபிரிக்க நாடாளுமன்றம் கூடியது. இந்த நூற்றாண்டின் இணையற்ற நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்

யாக 'கறுப்புச் சூரியன்' அறுதிப் பெரும் பான்மையோடு ஆட்சி பீடம் ஏறியது. 5000 இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வாழ்த்துக் கூற, உலக நாடுகளில் இருந்து வந்திருந்தார்கள்.

120 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் சூழ்ந்திருந்து யாகம் செய்ய, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தன் இலட்சிய மந்திரங்களை ஓத, கறுப்பர்கள் வளர்த்த விடுதலைத் தீயின் முன் நெல்சன் மண்டேலா சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

"விடுதலைக்காக போராடுபவர்களே வீறு கொள்ளுங்கள்" நெல்சன் மண்டேலா சொல்லாமற் சொன்ன அந்தச் செய்தி இந்து சமுத்திரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் இலங்கைக்குள்ளும் இதன் அதிர்வலைகள்.

தென்னாபிரிக்காவில் 'கறுப்புச் சூரியன்' உதித்து விட்டான். தென்னாசியாவிலும் வானம் சிவந்திருந்தது. நாளை உதிக்கப் போகும் எங்கள் 'சிவப்புச் சூரியனுக்கு வாழ்த்துக் கூற.

– முத்து விஜயராகவன்

## தேர்தல் தேனாபிஷேகம்

- குழந்தைகளுக்கு பாலுணவும் மாதம் 100 ரூபாவும் கிடைக்கும்.
- தடுப்பு முகாம் கைதிகள் தேர்தலுக்கு முன் விடுதலை.
- நிவாரணம் அதிகரிப்பு.
- 20. 000 தற்காலிக ஊழியர்க்கு உடனடியாக நிரந்தர நியமனம்.
- ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு.

## குறுமணிகள்

- கொடுத்து முட்டை வாங்குபவன் சம்சாரி. கொடுக்காமல் சும்மா வாங்குபவன் அரசியல்வாதி.
- பெற்றோர் இறந்த உடன் பிள்ளைகள் வெள்ளரிப் பழம்போல் பிரிந்து விடுவார்கள்.
- உலகத்தில் உள்ளவர்கள் எல்லோரும் நல்லவர்கள். எப்போது? தூங்கும் போது.
- நாம் உண்மையில் வாழவில்லை. வாழ்வோமென்ற எண்ணத்தில் இருக்கின்றோம்.
- அளவுகடந்த வரதட்சனை முள்ப் படுக்கை போன்றது.

## விஞ்ஞானப் பட்டதாரியும் மலையக மைந்தனுமாகிய சு. முரளிதரனின் யப்பானிய ஹைக்கூ வடிவங்களில் சில......

பாலை வனத்துக்கு மேலே மழை
முகில்கள் எம்மவர் கண்ணீர்

பசுமையுடன் இளமை முடிய
காவியுடன் வெளியேற்றம் இலைகள்!

மணமக்கள் அங்கக்குறை நிவர்த்தி
செய்யப்பட்டு விட்டதே! தங்கம்

வாசனைப்புகை வண்ண மலர் போசனை
உணவு கண்மூடிய விக்கிரகம்!

எத்தனை மரணங்கள்
கல்லறைகள் வில்லைகள்.

அடைபட்ட கைதிகளுக்கு அவ்வப்போது
மரணதண்டனை தீக் குச்சிகள்

ஆழ் கடலுக்குள்ளும் திருடர்கள்
மூடியிருந்த பெட்டகம் முத்துச் சிப்பி

நேர்த்தியாகத் தெரிகின்றது உடைந்த
சமுதாய பிம்பம் எழுத்தாளன்.

தீயை முத்தமிட்டும் எரியாப் பஞ்சுப்
பொதிகள் வெண் முகில்கள்.

பெய்யெனச் சொல்லியும் மழை பெய்ய
வில்லை – கற்பில்லைத்தான் காடுகளுக்கு.

நிலவின் மரணத்தில் துக்க
அனுஷ்டானம் அமாவாசை.

மாடியிலிருந்து ஏசிய துரை தொழிலாளியின்
கால்களில் வீழ்ந்தான் நிழலின் ஒத்திக்கை.

ஏய்! யாரங்கே ஆற்றில் பாலைக் கொட்டி-
விட்டு ஓலமிடுவது நீர் வீழ்ச்சி.

பாறைப் பிரதேசத்துக்கு உயிர் வந்து
விட்டது சிற்பியின் வரவு.

வறுமை, கொடுமை, அடக்குமுறை மனித
பூமியில் கொழுந்து விட்டது தேயலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்பிளைப் பிள்ளை

- ஸ்ரீராகவன்

உலக சனத்தொகை இன்னும் சற்று நேரத்தில் ஒரு ஜீவனால் அதிகரிக்கப்போகின்றது. அந்த பகத்தான சேவையைச் செய்தமைக்காக எனக்கும் என் இளம் மனைவிக்கும் இந்தச் சமூகம் 'அப்பா, அம்மா' பட்டஞ் சூட்டி கௌரவிக்கப்போகின்றது.

இன்னும் சிறிது நேரம்......சிறிது நேரந்தான் என் மனைவிக்கு பிரசவநேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவள் வேதனையால் முனகுகிறாள். வியர்வைத்துளிகள் அவளது அச்சத்தை கோடிகாட்டியபடி முகமெங்கனும் கோடிடுகின்றன.

சுதந்திரமாக புரண்டு படுக்கமுடியாமல் என் அன்புப் பரிசை சுமந்தபடி அவள் திண்டாடுகிறாள். எனக்கோ அருகில் சென்று அவளை ஆசுவாசப்படுத்த வேண்டும்போல் தோன்றுகிறது. ஆனால் 'மகளிர் மட்டும்' என் எண்ணத்துக்கு தடை விதிக்கிறது.

நான் தவிப்போடு பார்க்கிறேன். அவளை பராமரிப்பதற்காக கூட நிற்கும் ஆயா என்னைநோக்கி சைகை செய்கிறாள். நான் அதைப் புரிந்துகொள்கிறேன். சுவாரசியமான நாவலொன்றுக்குள் மூழ்கியிருந்த அந்த தாதியின் முன் 'சுப்பர் சொனிக்' வேகத்தில் பிரசன்னமாகிறேன். நான் படபடப்புடன் சொன்னதைப் பொறுமையாகக் கேட்ட அந்தத் தாதி சிரித்தவாறே "அது நாங்கள் பார்க்கிறோம் நீங்கள் ஒண்டுக்கும் பயப்பிடாதைங்கோ" என்றுவிட்டு செல்கிறாள். அவர்களைப் பொறுத்தவரை இது அவர்களது நாளாந்தக் கடமைதானே.

நான்கு சக்கர நாற்காலியொன்று விரைகிறது. மனைவியை அதில் இருத்தி அழைத்து வருகிறார்கள். அவள் நாற்காலியின் விளிம்பில் தலைசாய்ந்தபடி...... கண்களைச் செருகி...... அரைமயக்கத்தில்...... பரிதாபமாக இருக்கிறது. பாவம் அவள். இனியும் அவளை இப்படி வேதனைப்படுத்தி இன்னொரு குழந்தை பெறவேண்டுமா? என்ற திடீர் ஞானோதயம், சவரம் செய்யப்படாத என் தாடியைப்போல் எனக்குள் தற்காலிமாக முளைக்கிறது. மீண்டும் அது எந்த இரவிலும் உடைந்து போகலாம். பிரமச்சாரியம் காக்க நானொன்றும் முனிபுங்குவனில்லையே! எல்லோரையும்போல் நானும் உணர்வுகளுக்கு விலங்கிடமுடியாத ஒரு சராசரி மனிதன் தானே.

மனைவியைத் தைரியப்படுத்தியபடி பிரசவ அறைக்குள் அழைத்துச் செல்கிறார்கள். என் கண்களுக்கு வெள்ளையுடையணிந்த அந்தத் தாதிகள் தேவதூதர்களாக தென்படுகிறார்கள்.

'ஸ்ரெதஸ்கோப்' தாலிகட்டி மருத்துவ சேவையை மணம் முடித்துக்கொண்ட பொம்பிளைடொக்ரர் ஒருவர் தன் கண்களாலேயே, என் நாடித்துடிப்பை பார்த்துவிட்டு பிரசவ அறைக்குள் நுழைகிறார்.

நான் ஆஸ்பத்திரி வராந்தாவில் அங்குமிங்குமாக தவிப்புடன் நடக்கத் தொடங்குகிறேன். எனக்குள் பல எண்ணங்கள் அலைமோதுகின்றன.

ஆம்பிளைப்பிள்ளை பிறக்குமா? பொம்பிளைப் பிள்ளை பிறக்குமா? எதிர்வு கூற முடியாத நிகழ்வுதான். மனைவியின் சூலை வெற்றிகொண்ட என் விந்து தீர்மானிக்கப் போகும் விடயம். இயற்கையின் இரகசியம் கடவுள் என்பவரைத் தவிர வேறு எவருக்கும் புரியாத புதிர்.

ஆனாலும் எனக்குள் ஒரு நம்பிக்கையிருந்தது. ஆம்பிளைப்பிள்ளைதான் பிறக்குமெண்டு. எல்லோரிடமும் "அது பொம்பிளைதான்..." எண்டு சொல்லிக்கொண்டேனாயினும் எனக்குள் இப்படியும் ஒரு நம்பிக்கையிருந்தது உண்மைதான்.

எப்பவும் தலைப்பிள்ளை ஆம்பிளைப் பிள்ளையா இருந்தால்த்தானே தேப்பனுக்கு நடப்பு. இந்தச் சீதன சாம்ராஜ்ஜியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவன்தான் தன் முதல் பிள்ளையே பெட்டைச்சியாய் பிறப்பதை விரும்புவான்.

நான்கூட எங்கள் குடும்பத்தில் மூத்தவன்தானே. எனக்கடுத்து இரண்டு தங்கைகள். பிறகு கடைக்குட்டியான 'குட்டித்தம்பி.' எங்கள் நால்வரையும் இடைவெளிவிடாது சுமந்து பெற்ற அம்மாவின் மீது இப்போ என்னையறியாமலே ஒரு மதிப்பு வளர்ந்தது.

ஐயாவை நினைத்தால்தான் ஆத்திரமாக இருந்தது. இத்தனை வயதாகியும் ஐயா இன்னும் தான் மாறவில்லையே. முன்பு குடித்துவிட்டு வந்து அம்மாவை துன்புறுத்தியது போல்.... இப்போதும் அந்தாள் என்ன மனுஷன்? என்ன கோபமாக இருக்கட்டும், இதுவரை காலம் ஒரு நாளாவது தன் மருமகளை வந்து பார்த்தாரா? இல்லை வீட்டுக் காரரைத் தன்னும் அனுப்பிவைத்தாரா?

காலடியோசை யாரோ வருகிறார்கள். அம்மாவாக இருக்கக்கூடாதா என்ற எதிர்பார்ப்புடன் திரும்பிப் பார்த்தேன். அந்தப் பொம்பிளை டாக்டர்தான் பிரசவ அறையிலிருந்து என்னை நோக்கி வருகிறாள். "என்ன மிஸ்" தயக்கத்துடன் கேட்டேன்.

அவள் வந்ததும் வராததுமாக "உங்கட மிஸ்ஸிசுக்கு அவசரமா ஒரு 'இன்ஜெக்ஸன்' தேவை வேண்டியாங்கோ" என்றவாறே பக்கத்து அறையொன்றுக்குள் நுழைந்தாள். நான் தயக்கத்துடன் பின் தொடர்ந்தேன்.

வெள்ளைக் கடதாசியொன்றில் இடியப்பம் பிழிந்தமாதிரி ஆங்கிலத்தில் ஏதோ கிறுக்கினாள் "இது இப்ப அரசாங்கம் அனுப்பிறயில்லை வெளியிலைதான் வேண்டவேணும்." நான் சிறீலங்கா ஜனநாயக அரசாங்கத்தையும், மதிப்பிற்குரிய அதி உத்தம ஜனாதிபதி அவர்களையும் சபித்தவாறே சுவரில் பார்வையைப் பதியவிட்டேன்.அங்கேயிருந்த மின்செருகிகளில் இருந்து மஞ்சள் நிற 'சாச்சர் ரோச் லைட்டுக்கள்' இரண்டு ஆஸ்பத்திரி மின்சாரத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தன.

நான் மருந்துச் சிட்டையைப் பெற்றுக் கொண்டு தனியார் மருத்துவ விற்பனை நிலையமொன்றை நாடி விரைந்தேன்.

"அண்ணை இந்த 'இன்ஜெக்சன்' உங்களிட்டை எடுக்கலாமே"

"இது... இப்ப இஞ்ச வாறயில்லை. யாழ்ப்பாணத்திலை உதுக்கு சரியான தட்டுப்பாடு......"

என் முகம் ஒரு நிமிடத்தில் சோர்ந்தது. அதை குறிப்பாக அவதானித்துக் கொண்ட அந்தக் கடைக்காரர் "உங்களுக்கு வேணுமெண்டா 'உள்ளுக்குள்ளாலை' எடுத்துத் தரலாம். ஆனா விலைதான் கொஞ்சம் கூட வரும் இஞ்சை ஒருதரும் உது வெளியாலை விக்கிறயில்லை" மீண்டும் என் முகம் உயிர்த்தது. மயில்த்தாளொன்று கைமாற மருந்து என் கைக்கு வந்தது. பெற்றுக்கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தேன்.

எனக்காக காத்திருந்த தாதியொருத்தி மருந்தைப் பெற்றுக்கொண்டு விரைந்தாள். மீண்டும் நான் ஆஸ்பத்திரி வராந்தாவை நடையால் அளக்கத் தொடங்கியபோதுதான், வயது முதிர்ந்த அந்த ஆயா என் அருகே வந்து "ஏன் உங்கட ஐயா, அம்மா ஒருதரம் வரமாட்டினமோ?" என்று தன் இரண்டு நாள் சந்தேகத்தை என்னிடம் வெளியிட்டாள்.

"இல்லை அவை வரமாட்டினம் அவைக்கு ஏலாது——"

மொட்டையாக என் பதில் - தெரிந்து சொன்ன பொய் ஆயாவுக்கு என் நிலமை விளங்கியதோ என்னவோ மேலும் கதையை வளர்க்காது மௌனமாக அவ்விடத்தை விட்டு நகர்கிறாள். மானசீகமாக அவளுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

கால்கள் உளைவெடுக்க அருகேயிருந்த நீளமான ஆஸ்பத்திரிக் கதிரையொன்றில் அமர்ந்துகொண்டேன். ஆயா எழுப்பிய கேள்வியால் 'சூரிய கந்த'ப் புதைகுழிபோல் என் நினைவுப் புதைகுழிகளும் மெல்ல மெல்ல தோண்டப்படுகின்றன.

தான் ஐயாவுக்கெண்டு எவ்வளவத்தைச் செய்தேன். அவருடைய பாரத்தையும் எனர தலையிலை போட்டுக்கொண்டு, அட்வான்ஸ் லெவலோடை படிப்புக்கும் தலைமுழுகியிற்று, எங்கேயோ கண்காணாத தேசத்துக்குப் போய், ஆறுவரிசமா காய்ஞ்சு, என் கல்யாணத்தைப் பற்றியே கவலைப்படாமல், இரண்டு தங்கைகளையும் கரைசேர்த்து, புதுவீடுகட்டி .. கடைசியிலை ஐயா என்னையே தூக்கியெறிஞ்சிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மீசை அரும்பிய காலங்களில் நான் விரும்பிய அந்தப் பெண்ணைத்தான் திருமணம் செய்யப் போகிறேன் என்று சொன்ன போதுதான், முதன்முதலாக ஐயாவின் குரல் எனக்கெதிராக எழுந்தது.

"டேய்..... உனக்கு என்னதுணிவு - அதுகளின்ர அந்தஸ்தென்ன எங்கடை அந்தஸ்தென்ன. உன்ர உழைப்பிலைதான் குடும்பம் நடக்குதெண்ட துணிவிலை நீ எதையும் செய்யலாமெண்டு நினையாதை. ஒழுங்கா நல்ல சீதனத்தோடை நான் பேசுற சம்மந்தத்தைத்தான் நீ செய்ய வேணும். அதை விட்டிட்டு காதல் கீதலெண்டு ஏதாவது கதைச்சியோ நான் இல்லாட்டி நீ வீட்டைவிட்டு வெளிக்கிடவேண்டி வரும்."

ஐயா,எச்சரித்தார். கடைசி நேரத்திலும் என்னை காசுப்பொருளாக்கி ஆதாயம் தேடும் ஆசை அவருக்கு. ஐயாவின் குரலுக்கு அம்மாவும் அடங்கிப்போனாள்.

நானாகவே வீட்டைவிட்டு வெளியேறினேன். எங்கள் திருமணம் எளிமையாகவே நடந்து முடிந்தது - தங்கைகளும், தம்பியும் ஐயாவுக்குத் தெரியாமல் வந்துவிட்டுப் போனார்கள். அம்மாவால்த்தான் வரமுடியவில்லை.

நாங்கள் தனிக் குடித்தனம் அமைத்துக் கொண்டோம். அலுவலகமொன்றில் எனக்கு வேலையொன்றும் கிடைத்தது. சம்பளம் ஏதோ வாழ்க்கைச் செலவுக்குப் போதுமானதாகத்தான் இருந்தது.

ஐயாதான் பொறுப்பில்லாமல் கதைத்துக் கொண்டு திரிந்தார் 'அவள் ஏதோ மயக்கிப்போட்டாள். அவர் தன்ர விருப்பத்துக்கு செய்துபோட்டு இப்ப கஸ்ரப்படுறாராம். நான் சொன்ன இடத்திலை செய்திருந்தா இப்ப 'ராசா' மாதிரி காலுக்கு மேலை கால் போட்டுக் கொண்டிருந்து சாப்பிடலாம்......" ஐயாவின் கதைகளை நான் என்றுமே சாட்டை செய்ததில்லை - சாட்டை செய்யப் போவதுமில்லை. ஐயாவுடனான தொடர்பும் ஆனையிறவுப் பாதையைப்போல் காலப்போக்கில் முற்றாகவே அடைபட்டு போனது.

மனைவிதான் கர்ப்பமுற்றிருக்கும்போது அடிக்கடி சொல்லுவாள். பெரியவை எப்பவும் அப்படித்தானப்பா - நீங்கதான் எப்பிடியும் மாமாவை சமாதானப்படுத்தி கூட்டிவர வேணும். எங்களுக்கு குழந்தை பிறந்த உடனே நீங்க கட்டாயம் உங்கட வீட்டை போய் சொல்லவேணும். எனக்காக சொல்ல வேணும்...... சொல்லுவியளா?" என்னிடம் அவள் யாசித்தாள். நான் ஒப்புக்கொண்டேன். மனைவியின் ஆசையை நிராசையாக்குவதில் எனக்கு விருப்பமில்லைத்தான்'

நினைவுகளை அசைபோட்டுக் கொண்டிருந்த என் மனதுக்கு அவசர செய்தியொன்று வர அது சுத்தரித்துக் கொள்கிறது. நான் இருக்கையை விட்டு அவசரமாக எழுகிறேன். ஆஸ்பத்திரிக் கதிரைத் துளைக்குள் மறைந்திருந்த மூட்டைப் பூச்சிகளின் கெரில்லாத்தாக்குதலில் என் கணிசமான தொடைப்பகுதி தேசமாகியிருந்தது. பழுப்பேறி, நைந்துபோன என் ரவுசறினூடாக கால்களைத் தடவிப் பார்க்கிறேன். நிறைய இடங்கள் தடித்துப் போயிருந்தன. பொல்லாத மூட்டைப் பூச்சிகள்தான்...... பொருளாதாரத் தடையால் மெலிந்துபோன என் தேகத்திலுமா இரத்தம் குடிககவேணும்?

எதிரே ஏதோ சலசலப்பு- பிரசவஅறை வாசல்த்திரையை ஒதுக்கியவாறே தாதியொருத்தி வருகிறாள்.

"உங்களுக்கு பொம்பிளைப் பிள்ளை பிறந்திருக்கு" அந்த வசனம் மீண்டும், மீண்டும் எனக்குள் எதிரொலிக்கின்றது. இனம் புரியாத ஏதோ ஒருவகை உணர்வு, ஏமாற்றம், சோர்வு, பெருமூச்சு எல்லாம் என்னுள் வெளிப்படுகிறது.

ஆம்பிளைப் பிள்ளை பிறந்தா எல்லாருக்கும் கற்கண்டு வேண்டிக் குடுக்க வேண்டும் என்ற என் ஆசையெல்லாம் சர்க்கரையாகக் கரைந்து போகிறதே.

சற்றுநேரம் கழித்து என்னைப் பார்ப்பதற்கு அனுமதிக்கிறார்கள். நான் தயக்கத்தோடு உள்ளே செல்கிறேன். மனைவி படுத்திருந்தபடியேதான் தலையை திருப்பி என்னை நோக்குகிறாள். "பிள்ளையின்ர அப்பா வந்திருக்கிறார், அப்பா வந்திருக்கிறார்" ஆயாதான் குழந்தையை வாரி எடுத்து என்னிடம் தருகிறாள். குழந்தை தாயைப்போல நல்ல சிவப்புத்தான்.

எனக்கு கை பதறுகிறது. குழந்தையோ வீரிட்டு அழுகிறது. நன்றாக அழட்டுமேன். இனி இதை வளர்த்து ஆளாக்குவதற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எவ்வளவு அழவேண்டுமோ? அதற்கு பிரதியுபகாரமாகவேனும் அது அழட்டு மேன்.

ஆயாவிடம் குழந்தையை ஒப்படைத்து விட்டு மனைவியின அருகில் செல்கிறேன். ஆயாவின் " டுர்ர்ர்ர..... டுர்ர்ர்ர " சத்தத்தில் குழந்தை இன்னும் இன்னும் கூட அழுகிறது.

மனைவி என் முகத்தை கூர்ந்து பார்க்கிறாள். என் முகத்தில் பிரகாசமில்லை என்பதை அறிந்துகொண்டாளோ என்னவோ ' ஏனப்பா ஒருமாதிரியிருக்கிறியள் - பொம்பிளைப் பிள்ளை பிறந்தது உங்களுக்கு விருப்பமில்லையே" மென்மையான அந்த வார்த்தைகளில் நான் நிலைகுலைகிறேன்.

" சீச்சி...... அப்பிடியொண்டுமில்லை' நான்...... நான்...... சந்தோசமாத்தானே இருக்கிறன் " என் குரலில் சுரத்தில்லை. இயன்றவரை என்னைக் காட்டிக்கொடுக்காமலிருக்க முயற்சித்தேன்.

சிறிதுநேர மௌனத்தின் பின் அவள் பலவீனமான குரலில் 'எப்பிடியும் இண்டைக்கே உங்கட வீட்டைபோய் மாமாக்கும், மாமிக்கும் பொம்பிளைப் பிள்ளை பிறந்ததெண்டு சொல்லிப் போடுங்கோ" என்றாள். மனைவியின் எதிர்பாராத இந்த நாகாஸ்திரத்துக்கு கட்டுப்பட்டு வேறுவழியின்றி தலையசைத்தேன் - குழந்தையைப் பரிசோதிப்பதற்கு டாக்டர் ஒருவர் வரவும் நான் மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியேறவும் சரியாகவிருந்தது.

சைக்கிள் பாதுகாப்பு நிலையம் - சில்லறை இல்லாது பத்துரூபாய்த் தாளை நீட்டுகிறேன். மீதி எட்டுரூபாவும் சில்லறைகளாக சேட் பொக்கற்றுக்குள் புகுந்து கொள்கின்றன. மனதைப் போலவே அந்தச் சில்லறைகளும் கனக்கிறது.

வீட்டை எப்பிடியும் போகத்தான் வேண்டும். மனைவி சொல்லிவிட்டாள். ஊருக்குள் போனால் இனி எல்லோரும் கேட்பார்கள். அவர்களுக்கு பதில் சொல்லும் தைரியம் இப்போ என்னிடம் இல்லைத்தான். என் மனக்களத்தில் பல போராட்டங்கள் - நடந்து முடிந்த பூநகரிச் சமர் போல என் குழந்தையின் எதிர்காலம் - பெண் என்றாலேயே எப்போதும் ஈனப்பார்வை பார்க்கும் இந்தச் சமூதாயம். இந்த ஈருடகத் தாக்குதல்களையும் எப்படித்தான் சமாளிக்கப் போகிறேனோ! என் அடிவயிற்றில் ஒரு கலக்கம்.

சைக்கிள் தன்பாட்டிற்கு பள்ளந்திட்டிகளில் ஏறி இறங்கிப் போய்க் கொண்டிருந்தது. எப்படியோ ஊருக்குப் போய்ச் சேர இன்னும் ஒரு மணித்தியாலம் பிடிக்கும். அதற்கிடையில் யாரையுமே சந்தித்துவிடக் கூடாது என்று நேர்த்தி வைத்துக்கொண்டு சைக்கிளை உழக்கினேன்.

எது எப்படியிருந்தாலும் என்னைச் சந்திப்பவர்களுக்கு ' ரொபி ' குடுத்து என் " மகிழ்ச்சியை " தெரிவிக்க' வேண்டுமே அந்தச் 'சம்பிரதாயத்தை மீற விரும்பாது வீதியோரக் கடையொன்றில் சைக்கிளை நிறுத்துகிறேன்.

கடையில் ஏதோ பொருட்ளை அவசர அவசரமாகப் பொதிசெய்து கொண்டிருக்கிறார்கள். முதலாளி என்று கணிக்கத்தக்க ' பெரிய மனிதர்' ஒருவர் யாரையோ பேசிக் கொண்டிருக்கிறார். " டேய்..... இஞ்சைவா, இதார் கட்டினது. பெட்டைக்கட்டு கட்டியிருக்கிறியள். இந்தா அவிட்டுப் போட்டு திருப்பிக்கட்டு.....

எனக்கு சுள்ளிட்டது.

பெட்டைக்கட்டு - ஆம் பெட்டைக் கட்டு எண்டுதான் சொன்னார். பெண்களுக்கு இந்தச் சமூகம் தரும் மதிப்பு இவ்வளவு தானா? சோர்வுடன் திரும்பவும் சைக்கிளை உழக்கிறேன். எனக்குஏன்தான் இப்படியான தோ? இது பொம்பிளைப் பிள்ளையளுக்கு பெற்றோராகும் எல்லோரிடத்தும் தொற்றிக்கொள்ளும் வியாதிதானோ? எனக்குப் புரியவில்லை.

ஊர் நெருங்க நெருங்க என் விரைவும் அதிகரிக்கிறது. பேசாமல் ஊருக்கு போகாமலே திரும்பி விடுவோமோ என யோசிக்கிறேன்.

திடீரெனத் தேகம் குளிர்கிறது. இரண்டு மூன்று நீர்த்திவலைகளை அன்பளிப்புச் செய்த வானம் ' உஸ்ஸ்ஸ்...... ' என இரைந்தபடி... மழை! மழை! இதுவும் எதிர்பாராதது தான்.

மற்றவர்களைப் போல் நானும் வீதியோர வீட்டுத் தாவாரமொன்றுக்குள் ஒதுங்கிக் கொள்கிறேன். மழைத்துளிகள் மண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிடுகின்றன. எனக்குள் ஏதோஒருவகை குளிர்ச்சி; உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை வியாபிப்பதை உணர்கிறேன்.

வீட்டுக்குள் தாயொருத்தியின் பேச்சுக் குரல் கேட்கிறது. "தம்பி உனக்கெத்தினை தரம் சொல்லிறது. ஒருக்காச் சொன்னாக் கேளேன். பெட்டை நாய்க்குட்டியைக் கொண்டந்து கொஞ்சிக் கொண்டிருக்கிறாய் - கடுவனெண்டாலும் பரவாயில்லை. உதென்ன கறுமத்துக்கு. உதைக் கொண்டுபோய் முதல் வெளியிலைவிடு"

தம்பியின் சிணுங்கல் அதை மறுக்கிறது. "இப்ப அப்பாட்டைச் சொல்லிறதே" தம்பியின் சிணுங்கல் மெல்ல அடங்கிப் போகிறது. தொடர்ந்து. நாய்க்குட்டியின் அவலக் குரல். வாசல்க் கதவு திறக்கப்பட்டு நாய்க் குட்டி வெளியேற்றப்படுகிறது.

வெளியே விடப்பட்ட அந்த நாய்க்குட்டி சுற்றும்முற்றும் மிரள மிரளப் பார்க்கிறது. பிறகு என்னை நோக்கி குடுகுடென ஓடிவருகிறது. நான் "அடீக்...... அடீக்...." என்றவாறு காலைத் தூக்குகிறேன். பிறகு அதற்காக நிறையவே வருத்தப்படுகிறேன். உண்மையிலேயே எனக்கு இந்த நாய், பூனையை தொடுவதெண்டால் ஒரு 'அரிகண்டம்' அது என் சுபாவமோ என்னவோ முந்தித் தொடக்கம் நான் அப்படித்தான்.

ஓடி வந்த அந்த நாய்க்குட்டி அப்படியே நின்று என்னைப் பரிதாபமாகப் பார்க்கிறது. "உனக்கும் பொம்பிளைப் பிள்ளைதானே பிறந்தது" என்கிற மாதிரியிருந்தது அதன் பார்வை. பிறகு மெல்ல மெல்ல வந்து என் கால்களுக்கிடையில் ஒட்டிக் கொள்கிறது. நான் அதைத் தடுக்கவில்லை.

மழை இப்போ கொஞ்சம் குறைந்திருந்த மாதிரியிருந்தது. ஆனாலும் விட்டுவிட்டது என்று சொல்ல முடியாதளவு பெய்து கொண்டு தானிருந்தது. குடையுள்ளவர்கள் மட்டும் வீதிகளில் பிரவேசித்தார்கள். நான் மழை முற்றாக விடுமட்டும் காத்திருந்தேன்.

வீதியில் பெண்ணொருத்தி மழையை அலட்சியப்படுத்திவிட்டு நனைந்தபடி வந்து கொண்டிருந்தாள்.

"சே......என்ன பெண்ணிவள் ஒற்றைக் கையால் இவ்வளவு அசட்டையாக சைக்கிள் ஓட்டி வருகிறாளே" - அவள் கிட்ட வந்தபோதுதான் என் கணிப்பு தவறு என்பதை உணர்ந்தேன். அவள் ஒரு விடுதலைப் போராளி என்பதை அறிந்தபோது என்னையறியாமலேயே எனக்குள் ஒரு மரியாதை.

அவளது இடதுகை இருக்க வேண்டிய இடம் வெறுமையாகவே இருந்தது. மண் மீட்புப்போரில் அவள் கையைத்தான் இழந்திருந்தாளேதவிர நம்பிக்கையை அல்ல என்பதை அவளது தீர்க்கமான விழிகள் உணர்த்தின. குண்டு விழுந்தாலும் குலையாத அந்த முகம். நான் கண்களை அகற்றாமல் அவளையே ஆழமாக பார்த்தேன்.

எனக்குள் ஒரு நெருடல்...... இவளும் ஒரு பெண்தானே! சீருடை அணிந்து இந்தச் சமூகத்தில் தலை நிமிர்ந்து செல்கிறாளே. எப்படி? பெண்களை மதிக்காத இந்தச் சமூதாயம் இவளை மட்டும் எப்படி அனுமதித்தது. ஆண்களுடைய சைக்கிளை ஒற்றைக் கையால் செலுத்துமளவுக்கு ஆன்ம சக்தி இவளுக்கு எங்கிருந்துதான் வந்தது.

சாவைக் கழுத்திலே காவத் துணிந்து விட்டவளுக்கு இதொன்றும் பெரிய காரியமில்லையே.

அவள் முன் நான்தான் எவ்வளவு தோற்றுவிட்டேன். என் கோழைத்தனத்தை எண்ணி நானே வெட்கப்பட்டுக் கொண்டேன். உறுதியுடன் சைக்கிளை பற்றுகிறேன். கால்களிலோ புது உற்சாகம் "எனக்குப் பொம்பிளைப்பிள்ளை பிறந்திருக்கு...... பொம்பிளைப் பிள்ளை பிறந்திருக்கு......' இந்த உலகத்துக்கே கேட்கும்படி உரத்துக் கத்த வேண்டும்போலிருந்தது.

இதுவரை என்னுடன் ஒட்டிக்கொண்டிருந்த அந்த நாய்க்குட்டி "என்னை விட்டு விட்டுப் போகிறாயா" என்பதுபோல் பரிதாபமாக என்னைப் பின்தொடர்ந்து ஓடிவந்தது. நான் குனிந்து கைகளால் அதைவாரி எடுத்துக்கொண்டு சைக்கிளை அவதானமாகச் செலுத்தத் தொடங்குகிறேன். மழை எனக்கு விலகி வழிவிடுகிறது. வீதியில் செல்பவர்கள் தான் என்னை வேடிக்கையாகப் பார்க்கிறார்கள். நன்றாகப் பார்க்கட்டுமேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேயின் சோதனைச் சாவு

காலைத் தென்றல்
களங்கமில்லாது வீசியது.
காற்றின் வேகத்திற்கேற்ப
கடல் இரைந்து கொண்டிருந்தது.
அடிவானக் கதிரவன்
ஈமத் தீ போலக் கனன்று கொண்டிருந்தான்.
திரைகளின் நுரையிலே
பென்குவின் பறவைகள் ஆடி, ஓடின
காலக் கூறால்
வகுக்கப்பட்ட வயதால்,
வேறுபட்டு - வேகமுடன்
தந்தை தாயுடன் சேயும்
கூடவே களித்து மகிழ்ந்தது.
தந்தை தாயின் பாசப்பிணைப்பால்
பிரிக்கமுடியாத சேர்வை அது.

எண்ணெய்க் கப்பலொன்று
கடலில் தவழ்ந்து கொண்டிருந்தது.
திடீரென எங்கிருந்தோ வந்த
தீக்கணையினால் தீப்பற்றியது கப்பல்
எண்ணெய் ஏசமும்
தண்ணீரில் மிதந்தது.
கடலே கறுப்புடைதரித்து.
சோகத்தை சேதியாய் சொல்லிற்று.

குதூகலமாய் இருந்த
குடும்பம் சிதைந்தது.
பிஞ்சுச் சேய்
செய்வதறியாது திகைத்தது.
வானமே இங்கு அழிந்து
விழுந்திற்றோ என நினைத்திற்று
வளி கடலினுள் வராததால்
கஷ்டப்பட்டது மூச்சிற்கு
கதிரவனின் ஒழியிழந்து
பகலும் இருளாய்த் தெரிய
இருளின் கருமைக்குள்
இதயம் கனக்க
தந்தை தாயினைத் தேடி
தனியே சென்றதே! மனமிழந்து

தேடியது! தேடியது!
தேகம் இழைக்கும்வரை தேடியது.
மனப்பயம் மருட்சிக்க
மறைவோடு மறைவாய்
தத்தளித்து தாயிழந்து
மதியிழந்து தேடியது.
தனிமையே கூட நின்று
குழி பறித்தது உயிரிற்கு

இறுதி மூச்சிலே
கடைசி வசனம் பேசிற்று.
மூன்றாம் உலகத்தை
மூடவாழும் மக்களே
எங்களின் உணர்வுகள் தானே
உங்களின் உணர்வு.
மேற்குலக நாடுகள்
உங்களைச் சூழவே
கழிவுகளைக் கொட்டுகின்றன.
இன்று பூமியே
குப்பைக் கூடையாயிற்றே
நாமழிந்த நிலை
நாளும் உங்களிற்கு
ஏற்படக் கூடாது
சூழலை சுத்தமாய் பேணி
சந்ததியைக் காத்து,
வாழுங்கள் நலமுடனே,,
என்று சேதி சொல்லி,
சாவை அணைத்தது
சோதனையுடனே

—திரு நீபன்



மனைவி:- குடிகாறன் எண்ட பெயர் கேட்டுவிட்டியளே.

கணவன்:- எவ்வளவு காசு செலவளித்து இந்தப் பெயர் கேட்டனான்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◐ நான் உயர் தரப் பரீட்சையில் சித்தி அடைந்தால் உங்களுக்கு

**ராஜா குளிர்**

சுவையகத்தில் சிற்றுண்டி விருந்து தருவேன்.

◐ என்ன ராஜா சுவையகத்திலோ



ஸ்பெஷல் கிறீம்
வனிலா ,,
சொக்லேற் ,,
நட்ஸ் ,,
ஜெலி ,,
புறுட்சலட் ,,
நெல்லி கிறஸ் ,,
ஒறேஞ் யூஸ்,

# ராஜா

# சுவையகம்

## (ராஜா கிறீம்கவுஸ்)

**36 சந்தோசம் தெரு.**

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது பேனா நண்பர்கள் பகுதிக்கு அமோகஆதரவு கிடைத்துள்ளது. அனைவருக்கும் எமது அன்பார்ந்த வாழ்த்துக்கள். உங்களது பெயர்கள் எமக்குகிடைத்த வரிசைக் கிரமத்தில் பிரசுரிக்கப்படும்

---

**க. கஜரூபன்**
உயர் தரம்— 1995
கலைப் பிரிவு
யாழ். இந்துக் கல்லூரி
18
புத்தகம், சஞ்சிகை
வாசித்தல், எழுதுதல்,

---

**சு. குணேஸ்வரன்**
கெருடாவில் தெற்கு.தொண்டைமானாறு
21
பத்திரிகை, சஞ்சிகை வாசித்தல்

---

**மு. எழில் முருகானந்தன்**
பிரதான வீதி, பருத்தித்துறை
8
மீன் வளர்த்தல், வீட்டுமிருகங்கள் வளர்த்தல்
நடனம்,முத்திரைசேகரித்தல், பாட்டு

---

**ப. தவநேசன்**
மந்துவில் தொருவாரம், கொடிகாமம்.
20
வானொலி, கதைப் புத்தகங்கள்

---

**சி. பேரின்பன்**
1005 மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்.
23
வானொலிகேட்டல், கதைப்புத்தகம் வாசித்தல்,
கிரிக்கட்

---

**க. ஞானபாஸ்கரன்**
கந்தரோடை,
சுன்னாகம்.
27
கவிதை, நாடகம்

---

**லோ. சிறீதரன்**
சந்தை முன் ஒழுங்கை, ஆடியபாதம்வீதி,திருநெல்வேலி.
18
கவிதை எழுதுதல்

---

**சிவானந்தன் நந்தகுமார்**
''அம்பிகை வாசம்''சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
24
தமிழீழத்தில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகள் பத்திரிகைகளை வாங்கி வாசிப்பதும் அவற்றை வீட்டு நூல் நிலையத்தில் சேகரித்து வைத்தல்.

---

**க. குகன்**
03,நல்லூர் குறுக்குவீதி,
யாழ்ப்பாணம்.
18
முத்திரைசேகரித்தல், பேனா நண்பர்கள்,எழுதுதல்

---

**அரியநாயகம் அசோக்கரன்**
மாசார், பளை.
20
கதைப்புத்தகம் படித்தல்

---

பேட்டுக் கோழி:- ஏன் இப்ப கூவிறது இல்லை.

சேவல்:- செல் கூவும் போது நான் கூவுவது கேட்காது.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன முகத்தில் ஒரு மங்களச் சிரிப்பு

**துர்க்கா வர்த்தக களஞ்சியம்**


இருக்கும் போது என்ன கவலை



★ *சைக்கிள் உதிரிப் பாகங்கள். பாடசாலை உபகரணங்கள், பாட்டா அன்பளிப்பு பொருட்கள், மற்றும் ஏனைய பொருட்களும் பெற்றுக் கொள்ளலாம்.*

Prop: **M, S. *SIVACHNDIRAN***

கொக்குவில் கிழக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி சொன்னதும் பல்லி சொன்னதும்...

செய்தி:- லஞ்சமாக அழகிய பெண் அரச அதிகாரி கேட்டாராம்.

பல்லி:- ஒரு பெண்ணா அல்லது நாளுக்கு ஒரு பெண்ணா என்று பாதாளஉலக அங்கத்தவர் கேட்கிறார்.

செய்தி:- காட்டுவழி தவறிய மனிதனை காப்பாற்றிய மனிதக்குரங்கு.

பல்லி:- மனிதக்குரங்கே...மனிதனின் சகவாசம் உங்களுக்கும் சீதனம் வாங்கப் பழக்கிவிடுவான்.

செய்தி:- பாஸ்கரலிங்கத்திற்கு பியோன் பதவியும் வழங்கமாட்டேன் - றொனிடிமெல்

பல்லி:- சப்பாத்து துடைத்ததற்கு உதையா பரிசு!

செய்தி:- குறுகிய காலத்தில் கோடீஸ்வரராகிய 38 அரசப்படை ஊழியர் மீது விசாரணை.

பல்லி:- இது குறுக்குவழி குபேரர் மலிந்த நன்னாடு.

செய்தி:- செல்லச்சாமி ஜே.ஆர் சந்திப்பு

பல்லி:- திருவாளர் செல்லச்சாமி—— உன் சாதகத்தைக் கணித்துக்கொள்.

செய்தி:- அலுவலகத்தில் மணி அடித்தால் ஆள் இல்லை.

பல்லி:- கரம் விளையாட்டில் எல்லாக்காயும் விழுத்தியிட்டன். இன்னும் ஒண்டுதான் இருக்கு. இப்பவா உந்த மணி அலறல் என்கிறார் ஓர் ஊழியர்.

## உணர்விலையோ---?

அன்றொரு நாளில் நாங்கள்
ஆறுபேர் சேர்ந்தோம்;சுற்றச்
சென்றனம், கே கே சுக்கு
சீறிடும் இரயிலில்; திக்கு
நன்றது என்றோம்; கண்டோம்
நடந்தனம்; கடலில் நின்றோம்.
இன்றதை எண்ணும் போது...
இதயமே ஏக்கங் கொள்ளும்.

பண்ணையின் பாலந் தன்னில்
படுத்துநான் பார்த்தேன்; மேற்கில்
வெண்ணையிற் குளித்த செம்மை
வடிவமாய்ப் பருதி வானில்
கண்ணினை ஏப்பம் இட்டுக்
கணத்தினுள் மறைந்த காட்சி
எண்ணிலா இன்பஞ் சேர்க்கும்;
எண்ணினன்;இன்றோ சோர்ந்தேன்

உப்பளக் காற்றோ டான'
இறவதன்' எழிலைக் கண்டு
அப்பரும் நானும் உப்புப்
பாத்தியைப் பார்த்துக்- கொஞ்சம்
தப்படி தாண்டிப் பற்றை
தேடியே ஈச்சை தின்று
எப்படி வாழ்ந்தோம்? இன்றோ
இப்படி என்ன ஆச்சு?

சொல்லுவாய் சொல்லக் கேட்டு
செவி விழியாகும்; மட்டு
எல்லைஅம் பாறை மன்னார்
திருமலை வன்னி முல்லை
நல்நிலங் காண ஏங்கும்
நெஞ்சிலே ஆசை பொங்கும்
தொல்லைதான் இங்கும்;இப்போ
துடிக்குது உள்ளமப்பா!

என்னதான் கொடுமை செய்தோம்?
எம் நிலத் தாடக் கூட
இன்றெமக் குரிமை இல்லை—
இதைவிடக் கல்வி கேள்வி
ஒன்றிலும் முழுமை இல்லை.
ஒரு குடைக் கீழே நாமும்
நின்றிடல் தானோ வேண்டும்?
நிசந்தனி வாழ்வே வேண்டும்!

ஆக்கம்:- த.ஜெயசிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மீசை:- ஆண்களின் உதட்டில் இருக்கும் ரோம நாகரிகம்.

யப்பானியர்:- வியர்வைத் துளியில் தங்கச் சுரங்கம் காண்பவர்கள்.

பந்தி:- சமையலை திறனாய்வு செய்யும் 'செமினார்.'

தேர்தல்:- ஆவிகளும் அபேட்சகரை தேர்ந்தெடுக்கும் திருநாள்.

சிலந்திவலை:- சிலந்தியின் சாப்பாட்டு மேசை.

## விண்ணின் மழையும் மண்ணின் பிழையும்

*வாழ்க்கையே ஒருவாணிகந்தான்! வாணிகம் தவறல்ல. ஆனால், இலாபமே வேட்டையாக எண்ணி வாழ்தல் தீது. இருபாலும் பயனும் மகிழ்வும் உண்டாகும் வகையில் நடப்பதே நல்ல வாணிகம். ஆன்மிக வாழ்க்கையிலும் வாணிக நடைமுறை உண்டு.*

*''கொண்டும் கொடுத்தும் ஈசர்க்கு ஆட்செய்தல்'' என்ற இசைப்பா கூறும்; ''மாரி மாட்டு என்னாற்றும் கொல்லோ உலகு'' என்பார் திருவள்ளுவர். இஃது ஓர் உயர்வு நவிற்சி! மாரி, உயிரினங்களுக்குச் செய்யும் அளவு நாம் அதற்குக் கைம்மாறு செய்ய இயலாது என்பது உண்மை. ஆயினும் மழைக்குரிய சாதனங்களாகிய ஏரி, குளங்களைப் பராமரிப்பதும் புயலை நீர்த்திவலைகளாக மாற்றும் குளிர்ச்சியைத் தரக்கூடிய மரங்களை வளர்ப்பதும் நாம் மழைக்குச் செய்யும் கைமாறு! ஆனாலும் மழையின் உதவி அளவிலும் பயனிலும் கூடுதலானது.*

— குன்றக்குடி அடிகள்

## பேனாமிர்தம்
## கலைஞர்களின் பார்வை

கொத்தமங்கலம் சுப்புவை தேநீர் விருந்திற்கு அழைத்திருந்த நண்பரொருவர் தனது இல்லத்துச் சுவர்களை அலங்கரிக்கும் ஓவியங்களை அவருக்குக் காட்டிக்கொண்டுவந்தார்.

ஓர் ஓவியத்தின் முன்பு வந்ததும் சுப்பு அப்படியே ஓவியமாக நின்றுவிட்டார்.

வாலிபம் பூத்த ஒரு நாதஸ்வர வித்துவான் மெய்மறந்து நாதஸ்வரம் வாசித்துக்கொண்டிருக்கிறான். அவனுக்கு எதிரே மெல்லியல் அழகியொருத்தி லாவக நயத்துடன் பரத நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கிறாள்.

அந்த ஓவிய நாதஸ்வர வித்துவானின் தேவகானமும் நாட்டிய நங்கையின் கொஞ்சும் சலங்கையும் கொத்தமங்கலம் சுப்புவின் செவிகளில் தேனாகப் பாய்ந்தன. அவர்கள் தங்களுக்குள் பேசும் உரையாடல்கள் கூட அவருக்குக் கேட்டன. அவர்களிடையே பிணைப்பையும் பிணக்கையும் அவர் கண்டார். அந்த அனுவமே ''தில்லானா மோகனாம்பாள்'' என்னும் நாவலை எழுத அவரைத் தூண்டியது.

இச் செய்தியை அவர் அந்த நாவலின் முன்னுரையிலே கூறியுள்ளார்.

ஓர் ஓவியக் கலைஞன் தனது மனத்திரையிலே பார்த்த நாதஸ்வர வித்துவானையும் நாட்டிய நங்கையையும் கன்வஸ் திரையிலே வர்ண ஓவியமாக வரைந்தான் அதைப்பார்த்த இன்னொரு கலைஞன் வண்ணத்தமிழில் ஓவியமாக எழுதினான். ஆயிரக்கணக்கான வாசகர்கள் அதைச் சுவைத்தார்கள்.

திரைப்படக் கலைஞர்களின் பார்வை அந்த நாவலிலேபடவே பேசும் திரைப்படமாகி பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் இதய மேடைகளில் சண்முக சுந்தரத்தின் நாதஸ்வர இசையும் மோகனாம்பாளின் சலங்கை ஒலியும் காவியமாக எதிரொலித்தன.

கலைஞர்களின் 'பார்வை'யின் மகத்துவத்தைப் பார்த்தீர்களா?

– கபிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டுக

# சிரித்திரன் சிக்கல் X

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | 135 | |
| | | | |

பங்குபற்றுபவரின் பெயர்: ..................................................

முகவரி: ..................................................

.................... ....................

..................................................

## வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

இங்கே வெட்டுக

**அறிவுறுத்தல்: (1) முடிவு திகதி 20/ 10/ 94**

**(2)** மேற்காட்டப்பட்ட வெற்றிடமுள்ள சதுரங்களில் எண்களை இடுக. அச்சதுரங்களில் இடப்பட்ட எண்களின் கூட்டுத்தொகை கிடையாகக் கூட்டும் பொழுதும், நிலைக்குத்தாக கூட்டும் பொழுதும், மூலவிட்டமாகக் கூட்டும் பொழுதும் 510 ஆக இருத்தல் வேண்டும். ஒரு எண் ஒருதரம் மட்டும் உபயோகிக்கப்படல் வேண்டும்.

**(3)** ஆசிரியரின் விடையுடன் ஒத்து முதலாவதாகவும் இரண்டாவதாகவும் தெரிவு செய்யப்படும் விடைகளுக்கு முதலாம் இரண்டாம் பரிசுகள் வழங்கப்படும்.
இது தவிர ஆசிரியரின் விடையோடு ஒத்த மேலும் ஐவருக்கு, தலா 50/- வழங்கப்படும்.

**(4)** முதலாம் பரிசு - 150/-
இரண்டாம் பரிசு - 100/-

**விதிகள்:**

(i) போட்டிப் பத்திரங்கள் முடிவுத் திகதிக்கு முன்போ அல்லது அன்றோ வந்து சேரத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும். காலதாமதமாயின் நிராகரிக்கப்படும்.

(ii) போட்டிப்பத்திரங்கள் யாவும் சிரித்திரனில் பிரசுரிக்கப்பட்ட இதழிலேயே செய்யப்படல் வேண்டும். அவ்வாறில்லையேல் நிராகரிக்கப்படும்.

(iii) அனுப்பவேண்டிய முகவரி:- சிரித்திரன்
550, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

**தபால் உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் "சிரித்திரன் சிக்கல் போட்டி X எனக் குறிப்பிடல் வேண்டும்.**

(iv) போட்டிமுடிவுகள் சிரித்திரனில் வெளியாகும். பரிசுக்குரியவர்கள் தமது பரிசில்களை 550 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில்வந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

(v) ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. இது தொடர்பாக கடிதம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எதுவித தொடர்பும் அனுமதிக்கப்படமாட்டாது.
"வாசகர்களின் சிந்தனையைத் தீட்டுவதே சிரித்திரனின் அபிலாஷை"
*சிரித்திரன் சிக்கல் X இற்குரிய பரிசினை க. ராஜன் (82/10 கச்சேரி கிழக்கு, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.) அவர்கள் வழங்குவார்கள்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா தொழிலகத்தின் மற்றும் மோர் தயாரிப்பு

*கணவன்:* இட்லி, தோசைக்கு சபாஸ்

*மனைவி:* எனக்கு சபாஸ் சொல்லாதீங்கள்.
அண்ணா தொழிலகத்துக்கு சொல்லுங்கள்.



# இலகு தோசை மா

# இலகு இட்லி மா

- அரைக்கவோ, கரைக்கவோ, தேவையில்லை வெந்தயம், நற்சீரகம், மஞ்சள் முதலியன எல்லாமே அளவாக இச் சலவையில் அடங்கியுள்ளன.
- கலவையை குழைத்து 3 மணி நேரம் வைத்த பின் தோசையை தயாரிக்கலாம்.
- தோசையை தயாரிக்க தொடங்குமுன். சுவைக்கு சொற்ப உப்பையும் சேர்த்து கொள்ளலாம்.
- 250 gm. தோசை மா பக்கற்றில் இருந்து 14 தோசைகள் தயாரிக்கலாம்,

# அண்ணா தயாரிப்பகம் இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன் சிக்கல் IX இன் வெற்றி பெற்றவிடை

ஆசிரியரின் விடையுடன்ஒத்த பத்து விடைகள் வந்தன. எனவே குலுக்கல் மூலம் வெற்றி பெற்றவர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர்.

| | | | |
|---|---|---|---|
| 10 | 24 | 23 | 13 |
| 21 | 15 | 16 | 18 |
| 17 | 19 | 20 | 14 |
| 22 | 12 | 11 | 25 |

முதலாம் பரிசு 150 ரூபா

யோகநாதன் சிவராம்
மணித் தோட்டம்
தாவடி வடக்கு,
கொக்குவில்.

இரண்டாம் பரிசு 100ரூபா

யோகராசா – தனவேகிதன
இல – 407
திருநகர்
கிளிநொச்சி.

ஆறுதல் பரிசுகள் பெற்றவர்கள் தலா ரூபா 50

1. செ .யோகநாதன்
V.H. லேன்
இருபாலை
கோப்பாய்
2. யோகராசா – விடுவகாணநீதன்
புதுறேட்டு
கரவெட்டி மேற்கு
கரவெட்டி.
3. கிறிஸ்ரி யோன்சன்
25 மவுண் கார்மேல் வீதி
யாழ்ப்பாணம்.
4. கு. குணசீலன்
கல்வை வேம்படி
சுழிபுரம்
5. சு. கருணாநிதி
கல்வித் திணைக்களம்
நல்லூர்
யாழ்ப்பாணம்



Mrs:- டாமோடிரன்

Mrsடா:- டார்லிங் .. கும்பகர்ணன் காலத்தில் எலாம் மணிக்கூடு இருக்கவில்லையா?

Mrடா:- ! ! ! !

மணமகன்: மணவறையில் தலைகுனிந்திருந்தாயே உனக்கு அவ்வளவு வெட்கமா?

மணமகள்:- சீதனம் வாங்கிய உங்களை நினைத்து தலைகுனிந்தனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரு

ஒருவர்:- மிருகம் மனிதனைக்கண்டு வெட்கப்படும் காலம் எது சொல்லுங்க பார்க்கலாம்.

மற்றவர்:- ! ! !

ஒருவர்:- தேர்தல் காலமும், 'ராக்கிங்' காலமும்.

மகேஸ்:- எஞ்ஜினியர் மகனுக்கு 150 பெம்பிளையளின் போட்டோ பார்த்திட்டன்... .. எல்லாம் நான் தட்டியிட்டன்

சோதி:- மகன் ஏழில் செவ்வாய்க் காரனோ.. — ?

ஆசிரியர்:- காலம் மாறிப் போச்சு

ஒருவர்:- ! ! !

ஆசிரியர்:- சக்கரவர்த்தித்திருமகன் ராமர் சிறுவனாயிருக்கும்போது சந்திரனைப் பிடித்துத் தரும்படி அழுதாராம். இப்ப சிறுவர் சுப்பர் சோனிக்கை பிடித்துத் தரும்படி அழுகுதுகள்.

பெண்குயில்:- என்ன முகம் வாடியிருக்கு!

ஆண்குயில்:- ஒலிபெருக்கியிலை. வாற சங்கீதம் பிடிக்கவில்லை. ஒரு தன் சுருதி சேராமல் பாடுகிறான்.

மனைவி:- இஞ்சாருங்கோ குழந்தையளை பயப்படுத்தி வளர்ப்பது எனக்குப் பிடிக்காது

கணவன்:- ! ! !

மனைவி:- உங்களை குழந்தையில் பயப்படுத்தி வளர்த்ததால்த்தான் இரவில் கிணற்றடிக்குப் போகிலும் என் தாவணி முந்தானையைப் பிடித்துக்கொண்டுவாறியள்.

மனைவி:- மகனின் கடிதம் வந்திருக்குப் போலை...... காணியள் வித்து அவனை அனுப்பிய காசு அனுப்பியிருக்கிறான் போலை.

கணவன்:- பக்கத்து வீட்டுக்கடிதம். தபால்காரன் மாறித் தந்திட்டுப் போட்டான்.

மீனா:- *தாய்க்கு வருத்தம் கடுமை, நெருப்புக் காச்சல் என்டு தந்தி குடுத்தம்......*

சரோ:- *அவன் டொக்ரர். பிறிஸ்கிறிப்ஷன் அனுப்பியிருக்கிறான்.*

ஒருவர்:- வீடியோ வந்த பிறகு ஆருக்கு அதிஷ்டம் சொல்லு பார்க்கலாம்

மற்றவர்:- ஜெனறேட்டர் வாடகைக்கு விடுபவனுக்கு.

ஒருவர்:- இல்லை.

மற்றவர்:- கசட்வாடகைக்கு கொடுப்பவனுக்கு.

ஒருவர்:- இல்லை...... கண்டாக்குத்தருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org